சுற்று நிருப இலக்கம் : 10/2017

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு (மே.மா.)
இலக்கம் : 109, நான்காம் மாடி,
பிரதான வீதி,
பத்தரமுல்ல.
2017.05.04

மேல் மாகாணத்தின் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,
மாவட்ட கிராமிய வங்கி ஒன்றியங்கள், சனச சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுச் சபைகள் மற்றும்
ஏனைய அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்,

## சனச பொது முகாமையாளர் தரம் III - சம்.அள. 102: 5

அனைத்து சனச சங்கங்களிலும் சனச பொது முகாமையாளர் தரம் III பதவியை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் அங்கீகரிக்கப்படும் என்பதை ஆணைக்குழு நியதிகளுக்கேற்ப அறியத் தருகிறேன்.

1) பதவியின் பெயர் : சனச பொது முகாமையாளர் தரம் III
சம்பள அளவுத் திட்ட இலக்கம் : 102:5
ஆகக்குறைந்த வயதெல்லை : 30
ஆகக்கூடிய வயதெல்லை : 45

### பதவிக்கான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள்

(அ) 102 : 06 சம்பள அளவுத் திட்டத்திற்குரிய நிரந்தர பதவியொன்றில் 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது 103: 07 சம்பள அளவுத் திட்டத்திற்குரிய நிரந்தர பதவியொன்றில் 08 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து வணிகவியல் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 01 வருட திருப்திகரமான சேவை அனுபவமொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(இ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலை சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்ப நிறுவனத்தின் மூன்றாம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் அல்லது உயர் தேசிய கணக்கீட்டு டிப்ளோமா இரண்டாம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் 03 வருட திருப்திகரமான சேவை அனுபவமொன்றினைப் பெற்றிருத்தல்

எஸ்.ஏ.எல்.ரங்கனீ
செயலாளர்
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு
மேல் மாகாணம்

பிரதிகள் :

01. பிரதான செயலாளர், மேல் மாகாணம்.
02. செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, மேல் மாகாணம்.
03. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ சங்கப் பதிவாளர், மேல் மாகாணம்.
04. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - (கொழும்பு/கம்பஹா/களுத்துறை)
05. பணிப்பாளர், மேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்.
06. செயலாளர், மத்திய அரசின் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு.
07. அனைத்து மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் செயலாளர்கள்.
08. அனைத்து தொழிற் சங்கங்கள் ஒன்றியங்கள்